21.01.2017

தினமணி

# 1 கிலோ முட்டைகோஸ் ரூ. 1-க்கு விற்பனை: பொருளாதார நெருக்கடியில் விவசாயிகள்



ஒரு கிலோ முட்டைகோஸ் ரூ. 1-க்கு விற்பனை செய்யப்படுவதால் விவசாயிகள் கடுமையான பொருளாதார நெருக்கடியில் சிக்கி தவித்து வருகின்றனர். நீலகிரி மாவட்டத்தில் இந்த ஆண்டு எதிர்பார்த்த அளவு பருவமழை பெய்யாததால் ஆறு, குளம், அணைகள் நீரின்றி வறண்டு காணப்படுகின்றன. நகரப் பகுதிகள் மட்டுமின்றி பேரூராட்சி, ஊராட்சிப் பகுதிகளிலும் கடுமையான குடிநீர்த் தட்டுப்பாடு ஏற்பட்டது. வறட்சி அதிகரித்ததால் இத்தலார், முள்ளிகூர், நஞ்சநாடு ஊராட்சிகளில் உள்ள கிராமப் பகுதிகளில் விவசாயம் முற்றிலும் பாதிக்கப்பட்டது.

தண்ணீர் போதுமான அளவு கிடைக்காததால் விவசாயிகள் பயிரிட்டிருந்த கேரட், உருளைக்கிழங்கு, பீட்ரூட், முட்டைகோஸ், காலிபிளவர் உள்ளிட்ட பல்வேறு காய்கறிகளின் மகசூல் குறையத் தொடங்கியது. மேலும், விளைபொருளுக்கு போதிய விலை கிடைக்காததால்

விவசாயிகள் கடுமையான பொருளாதார நெருக்கடியில் சிக்கித் தவித்து வருகின்றனர்.

இந்நிலையில், தற்போது அறுவடை செய்யப்படும் முட்டைகோஸ் கிலோவுக்கு ரூ. 1 மட்டுமே விலை கிடைப்பதால் விவசாயிகள் கடும் பொருளாதார நெருக்கடியில் சிக்கி தவித்து வருகின்றனர். இதுகுறித்து, போர்த்தியாடா பகுதியைச் சேர்ந்த விவசாயி கூறியதாவது:

தண்ணீர் பற்றாக் குறையால் விவசாயத்துக்குத் தண்ணீர் இல்லாத நிலை ஏற்பட்டுள்ளது. மேலும், கையிருப்பில் இருந்த தண்ணீரை நம்பி சாகுபடி செய்யப்பட்ட நிலையில், இந்த ஆண்டு பருவமழையும் எதிர்பார்த்த அளவு பெய்யாததால் பயிர்கள் நீரின்றி கருகி வருகின்றன. மேலும், போதிய ஈரப்பதம் இல்லாததால் காய்கறிச் செடிகளில் பூச்சித் தாக்குதலும் ஏற்பட்டுள்ளது. தற்போது வெளிமாநிலங்களில் இருந்து வரும் காய்கறிகளுக்குத்தான் அதிக விலை கிடைக்கிறது. எனவே, மலைப் பகுதி விவசாயிகளுக்கு விளைநிலங்களில் கிணறு தோண்டத் தேவையான நிதியாதாரத்தை வழங்க அரசு முன்வர வேண்டும் என்றார்.

**மக்காச்சோளத்துக்கு காப்பீடு இல்லை: விவசாயிகள் அதிர்ச்சி**



ராஜபாளையம் பகுதியில் மக்காச்சோளத்துக்கு காப்பீடு இல்லை என கூறப்பட்டதால், விவசாயிகள் அதிர்ச்சியில் உள்ளனர்.

சோழபுரம் குறுவட்டம், தெற்கு வெங்காநல்லூர், சோழபுரம், ஜமீன்நத்தம் பட்டி உள்ளிட்ட கிராமப் பகுதிகளில் விவசாயிகள் மக்காச்சோளம் அதிக பரப்பளவில் பயிரிட்டுள்ளனர். இப்பகுதியில், பல ஆண்டுகளாக மக்காச்சோளம் விவசாயமே பிரதானமாக உள்ளது.

இந்நிலையில், பிரதமர் பயிர் காப்பீட்டுத் திட்டத்தில் விவசாயிகளை சேர்ப்பதற்கான விழிப்புணர்வுக் கூட்டம் கடந்த நவம்பர் மாதம் சிங்கராஜாகோட்டை தொடக்க வேளாண் கடன் சங்கக் கட்டடத்தில் நடைபெற்றது. சங்கத்தின் உதவி வேளாண் இயக்குநர், நியூ இந்தியா அஸ்யூரன்ஸ் காப்பீட்டு நிறுவனத்தினர் இணைந்து இத்திட்டத்தை அறிமுகம் செய்தனர்.

அப்போது, மக்காச்சோளத்துக்கு காப்பீட்டு கட்டணத்தை தொடக்க வேளாண் கூட்டுறவு சங்கங்கள் மூலமாக செலுத்த ஆலோசனை கூறப்பட்டதன்படி, நவம்பர் 1 ஆம் தேதி முதல் மக்காச்சோளப் பயிர்க்கு தெற்கு வெங்காநல்லூர், சோழபுரம், ஜமீன்நத்தம்பட்டி கிராம தொடக்க வேளாண் கடன் சங்கங்களில் 500 விவசாயிகள் கட்டணம் செலுத்தினர்.

தற்போது, மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கியின் வழிகாட்டுதலின்படி, இந்த 3 கிராமங்களுக்கு தேர்வு செய்யப்பட்ட பயிரில் மக்காச்சோளம் இல்லை என அதிகாரிகள் கூறுவதாக விவசாயிகள் புகார் தெரிவிக்கின்றனர்.

இதில், வேளாண் அதிகாரிகளின் சரியான வழிகாட்டுதல் இல்லை. இப்பகுதிக்குள்பட்ட அனைத்து விவசாயிகளும் பிரீமியம் செலுத்தி உள்ளோம். மழை பொய்த்து இழப்பு ஏற்பட்டுள்ள நிலையில், மூன்று மாதங்களுக்குப் பிறகு காப்பீடு இல்லை என அதிகாரிகள் கூறுகின்றனர். எனவே, அரசு உரிய நடவடிக்கை எடுத்து, பயிர் காப்பீடு கட்டணம் செலுத்திய அனைத்து விவசாயிகளுக்கும் இழப்பீடு வழங்கவேண்டும் என, விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.